Registered as a News paper in Ceylon

★ ★

விலை சதம் 1)

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது மார்கழி 19 ஆம் நாள் ஷஃபான 17 3 1 64 வெள்ளிக்கிழமை இதழ் 327

விற்பனையாகிறது!

ஈழநாடு தினக்குறிப்பு 1964

விலை ரூபா 1-00

# "வாக்குமூலம் ஆங்கில மொழியில் பதியவும்"

## யாழ்ப்பாணம் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு

### அரசாங்க அதிபர் யோசனை மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் கொடுக்கும் முறைப்பாடுகளையும் வாக்குமூலங்களையும் தமிழ் மொழில் பதிந்துகொள்வதற்கு வசதியில்லையெனில் சிங்களத்தில் பதியாது ஆங்கிலத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வடபகுதி பொலிஸ் அதிபர் உத்தரவிட்டுள்ளார்.**

பொதுமக்களுக்கு வசதிக்குறைவு ஏற்படாமலும் அநீதி இழைக்கப்படாமலும் உத்யோ மொழி அமுல் நடத்தப்படுகிறது என்று அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா நேற்று முன் தினம் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்திருந்தார். பொலிஸ் நிலை

(2 ம்பக்கம் பார்கக)

## அலுவலகங்களுக்கு தமிழரசுத் தலைவர்கள் விஜயம்

### சிங்கள அமுல்பற்றி ஆராய்கின்றனர்

யாழ்ப்பாணம, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களில் சிங்கள அமுல் எவ்வாறு நடைபெறுகின்ற தென்பதை ஆராய்ந்தறிவதில் தமிழரசுக்கடசித் தலைவர்களான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு வ. நவரத்தினம் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். சிங்களம் தீவிரமாக அமுல் நடத்தப்படும்க ரியாலயத்தின் முன் அவர்கள் உடனடியாக மறியல் இயக்கம்ஆரம்பிப்பார்களென அறியப்படுகிறது.

**மக்களுக்கு நன்றி**

ஜனவரி முதல் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட மக்களுக்கு நன்றி தெரிவித்து ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:-

நேற்றைய சிங்கள அமுல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பங்கு பற்றிய பல்லாயிரக்

(6-ம் பக்கம் பார்க்க)

## "அரசாங்க அதிபர்செயலை பொறுத்திருந்து பார்ப்போம்"

### எஸ். ஜே. வி. விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"இங்குள்ள அலுவலகங்களில் சிங்களத்தில் கருமமாற்ற முயற்சிக்க வேண்டாமென்றும் சிங்களத்தில் கடமையாற்ற வந்த ஊழியர்களை திருப்பியனுப்பும்படியும் நாங்கள் அரசாங்க அதிபரிடம் கூறியுள்ளோம். அவர் என்ன நடவடிக்கை எடுக்கிறர் என்று பொறுத்திருந்துபார்ப்போம். தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது இங்குள்ள கந்தோர்களில சிங்கள மொழியை அமுல் செய்தால் அந்தக் கந்தோரின் வாசலில் மறியல் இயக்கத்தை சாத்வீக முறையில் திடீரென ஆரம்பிப்போம்".

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்று முன் தினம் 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினர்.

மறியல் இயக்கம்பற்றி திரு செல்வநாயகம் மேலும் கூறியதாவது:-

சிங்கள மாகாணங்களில் சிங்களத்தை நேற்று முதல் அமுலாக்கியதுபோல இங்கும் அமுலாக்கியிருந்தால் இன்று மறியல் இயக்கத்தை நிச்சயம் ஆரம்பித்திருப்போம். அதற்கான திட்டங்களை ஏற்கனவே வகுத்துவைத்துள்ளோம். இங்குள்ள எல்லா கந்தோர்களிலும் சிங்களம் அமுல்செய்யப்படுகிறதா என்பதை அவதானித்தோம். சிங்கள ஊழியர்கள் இங்கு வந்திருந்த போதிலும் சிங்களத்தை அமுல் செய்யக்கூடிய அளவில் அதிகமான ஊழியர்கள் வரவில்லை.

**கச்சேரியில்**

கச்சேரிக்கு ஒரு சிங்கள சிருப்பர் 1-ம் தேதி வந்திருக்கிறர். அவரை அங்கு முத்திரை விற்கவிட்டிருக்கிருர்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்சூரன்ஸில் சிங்களம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை இன்சூரன்ஸ் கார்ப்பரேசனில் நேற்று முன் தினம் முதல். மோட்டார் இன்சூரன்ஸுக்கான பற்றுச்சீட்டுக்கள் தனிச் சிங்களத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டு வருகிறது. சிங்கள லிகிதர் ஒருவர் இவ்வேலையை நேற்று முதல் செய்துவருகிருர்.

இதுசம்பந்தமாக இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் மேலதிகாரி யொருவரை விசாரித்தபோதுசிங்களத்தில் எழுதப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகம் வந்திருப்பதாகவும், ஆதலால் சிங்களத்தில்தான் பற்றுச்சீட்டு எழுதமுடியு மென்றும், மேலிடத்தின் உத்தரவையே தாங்கள் செய்வதாகவும் கூறினர்.

## 'மலேசியாவை நசுக்க தயாராகுக' முப்படைகளுக்கு சுகர்னோ உத்தரவு

ஜகார்த்தா, ஜன. 2

மலேசியாவை நசுக்க தயாராகவிருக்கும்படி இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ முப்படைகளுக்கும் அறிவித்துள்ளார். மலேசியாவின் நடவடிக்கைகளைத் தடுத்து அதை நசுக்கும்முயற்சிகளில் ஈடுபட முப்படைகளும் தயாராக இருக்கவேண்டுமென்று அதிபர் சுகர்னோ அறிவித்துள்ளதாக டாக்டர் சுபத்திரியோ இன்று நிருபர்களிடம் தெரிவித்தகர்.

புதுடில்லி, ஜன. 2

பாரதத்துக்கும் பிரிட்டனுக்குமிடையே இன்று புதுடில்லியில் நடைபெற்றஹோக்கி போட்டியில் பாரதம் 5—1 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது.

## "டெயிலி மிரரை' தடை செய்க!"

### பத்திரிகைக் கமிஷனுக்கு மெத்தானந்தா கோரிக்கை

கொழும்பு, வியாழன்

இன்று காலை நடைபெற்ற பத்திரிகை விசாரணை கமிஷன்முன் பௌத்த ஜாதிக பலவேகயாவின் தலைவர் திரு. எல். மெத்தானந்தா சாட்சியமளிக்கையில், கொழும்பிலிருந்து வெளியாகும் "டெயிலி மிறர்" பத்திரிகையை உடனடியாக தடைசெய்யும்படி கோரியுள்ளார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி "டெயிலி மிறர்" பத்திரிகையில் வெளியான தலைப்புச்செய்தியின் மூலம் அது நாட்டுக்கு, எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறதென்றும் "டெயிலி மிறர்" பத்திரிகையை தடைசெய்யவேண்டும் என்றும் "டெயிலி மிறர்" ஆசிரியர் கத்தோலிக்க தேவாலயங்களின் 'வாய்' என்றும் திரு. மெத்தானந்தா பத்திரிகை விசாரணை கமிஷனமுன் தெரிவித்துள்ளார்.

## படகுவிபத்தில் 8 பேர் பலி!

### புதுவருடக் களியாட்டம் சோகத்தில் முடிந்தது

கொழும்பு, வியாழன்

புதுவருட தினத்தன்று ஏற்பட்ட படகு விபத்தொன்றில் 8பேர் மாண்டனரென்றும் சடலங்கள் மீட்கப்பட்டனவென்றும் கடைசியாகக் கிடைத்த பொலிஸாரின் அறிக்கையொன்று கூறுகிறது.

**முன்வந்த செய்தி**

புதுவருடத்தை களிப்பாகக் கொண்டாடிவிட்டு குதூகலத்துடன் படகொன்றில் திரும்பிக்கொண்டிருக்கையில் பதிேைழு பேர்கள் பெண்களும், ஆண்களும், குழந்தைகளுமாக உயிரிழந்தனர். பாணந்துறையிலுள்ள ஏரியை இக்கோஷ்டினர் படகு மூலம் கடந்து கொண்டிருக்கையில், ஏரியின் நடுவில் படகு கவிழ்ந்ததால் இவ்விபத்து ஏற்பட்டது. விபத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது.

வெலோனு செசவாலேயினர் விருந்துபசாரம் ஒன்றை நேற்றைய தினம் றகின் தீவில் நடத்துவதற்கு ஏற் பாடுசெய்திருந்தனர். இத்தீவுக்கு ஏரி ஒனறைக் கடந்தே செல்ல வேண்டும், சுமார் 900 பேர்கள் கலந்துகொண்ட இவ் விருந்துபசாரம் முடிந்ததும் கோஷ்டி கோஷ்டியாக படகுகளில் இவர்கள் திரும்பிக கொண்டிருந்தனர். உத்தியோகம்பார்க்கும் பெண்களை அதிகமாகக் கொண்ட கோஷ்டி திரும்பிக்கொண்டிருந்த படகே கவிழ்ந்தது. 20 பேர்கள் படகில் பிரயாணம் செய்ததாகவும் அவர்களில் 3 பேர்களே தப்பியதாகவும் கூறப்படுகிறது.

(6-ம் பக்கம் பர்க்க)

## நிக்ருமாவை கொல்ல முயற்சி

### சந்தேகநபர் கைது

ஆக்ரா, ஜன. 2

கான அதிபர் நிக்ருமாவைக் கொலைசெய்ய இன்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியுற்றது. இந்தச் சம்பவத்தில் அதிபர் நிக்ருமாவுடன் இருந்த மற்றொருவர் துப்பாக்கிச் சூட்டால் கொல்லப்பட்டார் என்றும் இது சம்பந்தப்பட்ட நபர் உடனே கைதுசெய்ய பட்டார் என்றும் இன்றிரவு கிடைத்த கடைசிச் செய்திகள் கூறுகின்றன. விபரம் தெரியவில்லை.

## மகாநாயக்கதேரோ தகனக்கிரியைகள்

கொழும்பு, வியாழன்

காலம்சென்ற மகாநாயக்க தேரோவின் சடலம் ஞாயிற்றுக்கிழமை தகனம்செய்யப்படும். அன்று நாட்டின் சகல பகுதிகளிலும் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படவேண்டுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

## மணிவாக்கு

உலகைச் சீர்செய்ய முதலில் நாட்டைச் சீர்செய்ய வேண்டும்; நாட்டைச் சீர்செய்ய, முதலில் நம் குடும்பத்தைச் சீர்செய்ய வேண்டும்; குடும்பம் சீராக முதலில் நமது சொந்த வாழ்க்கையைப் பண்படுத்த வேண்டும்; நம் சொந்த வாழ்வு பண்பட முதலில் நமது இதயத்தை சுத்தமாக்க வேண்டும்.

— கன்பியூஷியஸ்

ஈழநாடு
EELA NADU
ELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு மார்கழி மீ 19 உ (3 1 64)

## பிரதம மந்திரியும் சிறுபான்மையோரும்

இலங்கை பிரதமந்திரி புதுவருடச் செய்தியிலே இங்குள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு ஒரு உறுதி கூறியிருக்கின்றார். அவர்களது நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க அவர் எப்போதும் தயாராக இருப்பதாயும், மாறுதல்கள் ஏற்படும் இவ்வித சமயங்களில் சிறுபான்மைச் சமூகங்களுக்குச் சிறுசங்கடங்கள் ஏற்படலாமென்றும் என்றாலும் அவர்களது குறைகளைக் கேட்டு நியாயம் வழங்க எப்போதும் தமது அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் சொல்லுகின்றார்.

இந்நாட்டிலுள்ள இருமுக்கிய சமூகங்களில் தமிழ்பேசும் சமூகமும் ஒன்று. அச்சமூகத்தின் உரிமைகளைப் பாதிக்கும்படியான சட்டங்கள் பலநிறைவேறியுள்ளதால் அவர்களுக்குச் சங்கடங்கள் ஏற்பட்டுள்ளதை பிரதமர் உணர்ந்திருப்பது நல்லதே. ஆனால் 400 வருட காலமாக இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களின் சமயமும்மொழியும் அந்நிய ஆதிக்கத்தில் பாதிக்கப்பட்டதாயும் ஆகவே அவர்களது விருப்பத்துக்கு தகுந்த இடம் அளிக்க வேண்டியிருப்பதாகவும் கூறுகிறார் பிரதமர். உண்மை. இதேசமயம் அந்நிய ஆட்சியிலே இங்குள்ள தமிழரின் மதமும் மொழியும் அதே அளவு பாதிக்கப்பட்டன. அந்நிய ஆட்சி நீங்கியபோது தங்கள் மதத்துக்கும் மொழிக்கும் விமோசனம் பிறக்குமென்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால் சுதந்திரமடைந்தபின் இங்கு நிறைவேறிய சில சட்டதிட்டங்களும் நிர்வாகப் போக்கும் அம்மக்களின் நம்பிக்கையைக் குலைத்துள்ளதுடன் திகைப்பும் ஏமாற்றமுமளித்துள்ளது.

பெரும்பான்மை சமூகத்தின் விருப்பத்தையும் நலஉரிமைகளையும் மதிக்க வேண்டியதுதான். ஆனால் சிறுபான்மையோரின் மானத்தையும் உரிமைகளையும் பாதிக்காதமுறையில் அவற்றைப் பேண முடியாதா? ஜனநாயகத்திலே சிறுபான்மை மக்களுக்குத்தான் பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியம். ஆனால் [illegible]

ஆசிரியருக்குக் கடிதம்

## வட்டமேசை மகாநாட்டு யோசனை

மொழிப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு, பாராளுமன்ற அங்கத்தவர்களையும், சகல தலைவர்களையும் கொண்ட சர்வகட்சி மகாநாடு ஒன்றை உடனடியாக கூட்டவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை யாழ்ப்பாணம் மாநகரசபை நிறைவேற்றியுள்ளது. இதற்கு அரசாங்கத்திடமிருந்து பதில் வரும்வரை வரையில் தமிழரசுக்கட்சியினரை அவர்களது நேரடி நடவடிக்கை இயக்கத்தை சிறிது காலத்துக்கு ஒத்தி வைக்குமாறு மாநகரசபை கேட்டுக்கொள்ளும் என நம்பப்படுகிறது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததும் ஆங்கிலத்துக்குப் பதிலாக தேசிய பாஷைகளான சிங்களத்திலும் தமிழிலும் எவ்வாறு நிர்வாகத்தை நடத்தலாமென்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒரு கமிஷனை காலஞ்சென்ற பிரதமர் திரு. டி எஸ். சேனநாயக்கா நியமித்திருந்தார். சேர். ஆர்தர் விஜயவர்த்தனவின் தலைமையில் உள்ள இக்கமிஷனில் திரு. வில்வராயன், திரு. ஜூலியஸ் டி' லெனரோல் அங்கத்தவர்களாகக் கடமையாற்றினர். சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உத்தியோகஸ்தர்கள் எவ்விதத்தில் தேர்ச்சியடைய வேண்டும் என்பது பற்றியும், எவ்விதம் பாஷைகளை நிர்வாகத்தில் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கமிஷன் செய்திருந்த வழிவகைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் அதில் கூறப்பட்டிருந்த சிபார்சுகளை உரிய முறையில் அமுல் செய்ய முயற்சிக்கப்படவில்லை. இதற்கிடையில் தமிழை பிரதேச மொழியாக அங்கீகரிக்கக்கூடியவகையில் இல்லாத சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்டது. இதனால் தமிழின் நியாயமான உபயோகம் மறுக்கப்பட்டது. அந்த நேரத்தில் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா உத்தியோக மொழிச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு பாகுபாடு காட்டப்பட மாட்டாது என வாக்குறுதியளித்திருந்தார். தமிழர் வாழும் பிரதேசங்களில் அவர்களுடன் அரசாங்கம் தமிழிலேயே தொடர்பு கொள்ளும் எனவும் தமிழ் பிரதேச மொழியாகப் பாவிக்கப்படும் எனவும் அவர் வாக்குறுதியளித்திருந்தார்.

தமிழர் வாழும் பிரதேசங்களில் சிங்களத்தை அமுல் செய்து, தமிழர் மீது சிங்களத்தைத் திணிப்பது நீதியற்றதென மிக அண்மையில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த எம். பி. ஒருவர் கூறியிருந்தார். தமிழர்களுக்கும், அரசாங்கத்துக்கும் ஏற்கக் கூடியதான ஒரு முடிவுக்கு வருவதற்கு பார்லிமெண்ட் அங்கத்தவர்களையும் மற்றும் சகல கட்சித் தலைவர்களையும், பிரமுகர்களையும் கொண்டு ஒரு வட்டமேசை மகாநாட்டை கூட்டுவதற்கு அரசாங்கத்தை தூண்டக் கூடிய மனப்பான்மையுடையவர் இன்னும் பலர் இருப்பார்கள் எனவே நான் நம்புகிறேன்.

காலஞ் சென்ற பிரதமர்பண்டாரநாயக்காவுடனும், தற்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும்மொழிப்பிரச்னை சம்பந்தமாக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். இப்பிரச்னை நியாயமான முறையில் தீர்க்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

செனட்டர் திரு. சு. நடேசபிள்ளையும் இது விஷயமாகப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு, இப்பிரச்னை திருப்திகரமான முறையில் மிக விரைவில் தீர்த்து வைக்கப்படும் என ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். ஆனால் இதுவரையும் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சியினர் சத்தியாக கிரகத்திலும், நேரடி நடவடிக்கையிலும் இறங்கத் தீர்மானித்துள்ளனர். நல்ல மனப்பான்மையுடைய அரசாங்கக் கட்சி எம். பி. க்களும், மற்றும் சிங்களத் தலைவர்களும், இப்பிரச்னையை சமாதானமாகத் தீர்த்து வைப்பதற்கு உடனடியாகநடவடிக்கைகளில் ஈடுபடுவார்களா? தமிழரசுக் கட்சியினர் தங்கள் இயக்கத்தை ஒரு சில நாட்களுக்கு ஒத்தி

[ஏற்]கெனவே தமிழையும் அரசாங்க மொழியாக ஏற்று, பல வருடங்கள் அமுல் நடத்தி விட்டு திடீரென தமிழரின் எதிர்ப்பையும் இலட்சியம் செய்யாமல் தமிழை ஒதுக்கி தனிச்சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியது நியாயமா? சட்டத்தை நிறைவேற்றியதுடன் நில்லாமல் அதை மிக அவசரமாக அமுல் செய்வது முறையா?

இடைக்காலத்திலே பாதிக்கப்பட்டவர்கள், குறைகளைப் பற்றித் தெரிவித்தால் அதைப் பொறுமையாகக் கேட்டு எல்லாருக்கும் நியாயம் வழங்குவதாயும் கூறுகின்றார் பிரதமர். தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஏற்கெனவே தமிழ்மக்களின் பல குறைகளையும் பன்முறையும் பலவிதங்களிலும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள் சென்ற செப்டம்பர் மாதம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மிக உருக்கமான ஒரு கடிதம் பிரதமருக்கு எழுதியிருந்தார். கடிதம் கிடைத்தது என்று மட்டும் பிரதமர் பதில் எழுதினாரேயன்றி அவரைநேரில்அழைத்து குறைகளைக் கேட்டு நியாயம் வழங்க இதுவரை ஒன்றுமே செய்யவில்லை. பல நல்ல சந்தர்ப்பங்களையும் பிரதமர் கை நழுவவிட்டதால்தான், இன்று இருசமூகங்களுக்கும் உறவுகள் மிக மோசமாகி நாட்டின் முன்னேற்றமும் தடைப்பட்டிருக்கின்றது.

தனிச்சிங்களச்சட்டம் அமுல் நடப்பதால் அரசாங்கத்தில் மட்டுமன்றி, புதிதாக தேசியமயமாக்கப்படும் பல தாபனங்களிலும் சிறுபான்மையினரான தமிழ்ப்பேசும் மக்களுக்குஇடம் கிடைக்காமற் போகுமென்று அஞ்சப்படுகின்றது. தேசிய முன்னேற்றத்துக்காக ஒத்துழைக்கத் தமிழர் மிக ஆவலும் கவலையும் கொண்டுள்ளனர். ஆனால் அவர்கள் இந்நாட்டில் மானத்துடன், மகிழ்ச்சியுடன் வாழ முடியாமல் பலசட்டங்கள் ஒருதலைப் பட்சமாக அமுல் செய்யப்படுவதைத்தான் ஆட்சேபிக்கின்றனர். ஜனநாயகத்தில் பல தவறுகள் நடப்பது இயற்கை. இத்தவறுகளை உணர்ந்து, சீக்கிரத்தில் திருத்திக் கொள்வதே அறிவுடைமை. இப்போதும் காலங்கடந்துவிடவில்லை. மொழிப்பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை. ஆதலால்தமிழ்ப்பிரதிநிதிகள் உள்ளிட்டு எல்லாக் கட்சியினரையும் அழைத்து இதற்கு ஒரு சுமுகமான முடிவைக் காண பிரதமர் தேசாபிமானத்துடன் முன்வந்தால், இங்கு சமூக நல்லுறவு பலப்படவும் நாடு முன்னேறவும் [illegible] வழிபிறக்கும்.

வைத்து அதே நேரத்தில் தமிழ் பேசும் மக்களிடையே ஒருமுகமான ஒற்றுமையை ஏற்படுத்துவது மிகவும் நல்லதாகும்.

எஸ். ஏ. வைத்திலிங்கம்.
யாழ்ப்பாணம்.

## சமயப பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்க சைவசமய அபிவிருத்தி நிலைய ஆதரவில் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகராலயத்தில் இன்று காலை 8-45 மணி முதல் 9-45 மணி வரை பிரம்மஸ்ரீ இ ஞானசேகரக்குருக்கள் "சமயத்தத்துவங்கள்" என்னும் பொருள்பற்றியும் மேற்படி சங்க சமயப் பிரசாரசபையினரால் நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவில் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் மாலை 6-45 மணி முதல் 8 மணி வரை சமயப் பிரசாரகர் திரு. சி தம்பிஐயா "வரகுணபாண்டியனுக்குச்சிவலோகங்காண்பித்தமை" என்னும் பொருள்பற்றியும் மேற்படி சங்கச் சைவ இளைஞர் மன்ற ஆதரவில் நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் சமயப்பிரசாரகர்கள் செல்விகள் ஜெகதீஸ்வரிசாம்பசிவமும், சாம்பசிவம் நாகபூஷணியம்மாளும் "கிழவியும் குழவியும்" என்னும்பொருள்பற்றியும் மாலை 7மணி முதல் 8மணி வரை பிரசங்கங்கள் நிகழ்த்துவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

## வாக்கு மூலம்....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

யங்களில் வாக்குமூலம் சிங்களத்தில் பதிவுசெய்யப்படுவதால் பொதுமக்களுக்குச் சிரமம் ஏற்படுகிறதென்பதை நமது நிருபர் நேற்று அரசாங்க அதிபருக்குச் சுட்டிக் காட்டினார். இது சம்பந்தமாகத் தாம் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டென்டனுடன் யோசனை செய்வதாக அதிபர் தெரிவித்தார்.

### பொலிஸில் வசதியில்லை

வடபகுதி பொலிஸ் அதிபருடன் தாம் இது பற்றிப் பேசியபோது தமிழில் வாக்குமூலங்களையோ முறைப்பாடுகளையோ பதிவு செய்வதற்கு வடபகுதி பொலிஸ் நிலையங்களில் ஆள்வதியில்லையென்று அவர் கூறியதாக அசாங்க அதிபர் தெரிவித்தார். தமிழில் வாக்குமூலங்களையோ முறைப்பாடுகளையோ பதிவு செய்ய வசதியில்லாவிடில் அவற்றை சிங்களத்தில் பதியாமல் ஆங்கிலத்தில் பதிவு செய்ய ஒழுங்கு செய்யுமாறு தாம் கூறியதை பொலிஸ் அதிபர் ஏற்றுக்கொண்டு அவ்வாறு உத்தரவிட இணங்கியதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

## பாகிஸ்தான் பத்திரிகை கட்டுப்பாடு

லண்டன், ஜன. 2

பாகிஸ்தானில் விதிக்கப்பட்டிருக்கும் பத்திரிகை கட்டுப்பாட்டை 50 நாடுகளின் பத்திரிகை ஆசிரியர்களைக் கொண்ட சர்வதேச பத்திரிகைக் கழகம் கண்டித்திருக்கிறது. ராணுவ ஆட்சியின் கீழ் பத்திரிகை சுதந்திரம் அங்கு கேலிக்கூத்தாகியிருப்பதாக அது கூறியுள்ளது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

நியதாயும் பாராட்டினார் அவர். இனி பேச்சுகளைவிட பணியே தமக்கு அதிகம் தேவை என்பது ஸ்ரீ கேதீச்சர நாதரின் திருவுள்ளம்போலும்.

திணைத்தனை உள்ளதோர்
பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத் தெலும்புள் நெக
ஆனந்தத்தேன் சொரியுங்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

—மாணிக்கவாசகசுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

"எங்கள் நிலை இப்போது செக்கு மாடுகள்போலுள்ளது. அரசாங்கத்துக்காகப் பல வருடம் செக்கிழுத்து எண்ணெய் ஆட்டிக் கொடுத்தோம். இப்போது எங்களுக்குக் கிடைக்கும் பரிசு. செக்குமாடுபோல் கசாப்புக்கடைதான்"

இப்படி கொழும்பிலே அரசாங்கக் காரியாலயத்திலே வேலைபார்க்கும்ஒருதமிழ்எழுதுவினைஞர் தெரிவித்தாராம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். பொதுவாக அரசாங்க சேவையிலுள்ள தமிழரின் மனநிலை எப்படி உள்ளதென்பதை இது காட்டுவதாகவுள்ளது.

* * *

அரசாங்கத்தின் பழைய உத்தரவைக் கண்டதும், சிங்களத் திறமையற்ற ஓர் ஊழியர், வேலையிலிருந்து விலகுவதாகக் கடிதம் எழுதிவிட்டாராம். பின்னர் சிங்களம் கற்க இரண்டு வருட அவகாசம் அளிப்பதாகக் காருண்ய அரசாங்கம்,அறிவிக்கவே, அவர் தமது ராஜினாமாக் கடிதத்தை வாபஸ் வாங்க முன்வந்ததும் அது முடியாதென்று அவருக்குப் பதில் கிடைத்துள்ளதாம். அவருக்கு வாலிப வயது. பெரிய குடும்பம். மொழி காரணமாக அவர் வேலையை இழக்க நேரிட்டது அக்குடும்பத்துக்கே பெரிய சங்கடமாம்.

இந்தமாதிரிப்பலர் தவிப்பதாகத் தெரிகிறது. குறித்த காலத்துக்குள்ளாக, ராஜினாமா கடிதத்தை வாபஸ் வாங்க ஊழியர்களுக்கு உரிமை உண்டென்றும், அந்த உரிமையை மறுக்க யாருக்கும் அதிகாரம் கிடையாதென்றும் அரசாங்க தொழிற் சங்கத் தலைவர் கே. வி. நித்யானந்தம் கூறுகின்றார்.

மேலும் இதுபற்றிய வழக்கு இப்போது நீதிமன்ற விசாரணையில் இருப்பதாயும், ஆகவே அவ்வழக்கின் முடிவு தெரியும் வரையிலாவது, அரசாங்கம் இந்த உத்தரவை நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் கேட்கின்றார். வழக்கு எழுதுவினைஞருக்குச் சாதகமாக முடிவதாயின், அதற்குமுன் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவது சரியாகாதென்றும் வாதிக்கின்றார்.

இடைக்காலத்தில் ஏதாவது சங்கடம் ஏற்பட்டால், அதைத் தம்மிடம் தெரிவிப்பின் அதைக் கவனித்து நீதி வழங்குவதாக பிரதமர் புதுவருடச் செய்தியில் கூறியிருக்கிறார்.

இக்கஷ்டங்களைத் தொழிற் சங்கங்கள் நேரில் பிரதமரிடம் தெரிவிக்கவேண்டும். அவர்களுக்கு நியாயம் வழங்குகிறாரா பார்க்கலாம்.

அநியாயமாக யார் மனதையும் வேகவைக்கப்படாது. ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.

* * *

திருக்கேதீச்சரம் மார்கழி திருவாதிரை உற்சவத்துக்கு, இம்முறை மகாத்மா அவதரித்த போர்பந்தர் சமஸ்தானத்தின் மகாராஜா வந்து தரிசித்ததாக ஓரன்பர் தெரிவித்தார். தரிசனம் செய்தபின் அவர் கூட்டத்தில் பேசுகையில், அந்தத் திருப்பணியைப் பாராட்டி, ஆலயங்கள்தான் சமூகத்தின் உயிர் நிலையங்கள் என்றும் அதைப் பலப்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தினாராம்.

ரஸபதி அவர்கள் வருவதாக அறிவித்திருந்தனர். ஆனால் எதிர்பார்த்தபடியே அவரது வழியும் மறிக்கப்பட்டுவிட்டது. அவர் வராவிடினும் ஒரு மகாராஜா வரமுடிந்ததுபற்றி அந்த அன்பர் ஆறுதல் தெரிவித்தார்.

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் அங்கு நடந்த சிரமதான இயக்கத்தில், தொண்டர்கள் பாலாவிக் கரையைப் பலப்படுத்தியும் வீதிகளைச் செப்பனிட்டும் அரும்பணி ஆற்

(4-ம் கலம் பார்க்க)

# இந்தியாவில் பரவிவரும் பெண் கல்வி ஒரு புரட்சி

## மாதர் மகாநாட்டில் நேரு பேச்சு

புதுடில்லி, ஜன. 2

பெண்களிடையே கல்விபரவி வருவது இந்தியாவில் ஏற்பட்டுவரும் மற்ருேர் புரட்சி என பிரதமர் நேரு அகில பாரத மாதர் மகாநாட்டின் ஆண்டுக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

ஆனல் பட்டணங்களில்தான் மாதர்களிடையே பெருமளவு மாற்றம் ஏற்பட்டிருப்பதாயும் கிராமங்களில் ஓரளவு ஆரம்பம் இப்போது தென்படுவதாயும் அவர் கூறினர்.

"இந்தியாவில் மாதர்களிடையே கல்வி பரவிவருவது நம்பிக்கையளிக்கும் புரட்சியாகும். விடுதலைப் போராட்டத்தின்போது காந்திஜியின் உத்வேகத்தைப் பெற்று மாதர்கள் வெளியே வந்தார்கள்" என்றும் பிரதமர் நேரு கூறினர்.

மாதர்கள் கிராமங்களுக்குச் சென்று பணிபுரிய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீமதி பசுமாபேகம் மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார். 250 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள். நேபாளம், ஈரான், கென்யா ஆகிய நாடுகளிலிருந்து விசேஷப்பிரதிநிதிகள் மகாநாட்டில் பங்குபற்றினர்கள்.

ஈரான் மன்னர் ஷாவின் சகோதரி இளவரசி பெஹெல்வி பேசும்போது ஈரானில் பெண் உரிமை அங்கீகரிக்கப்பட்டிருப்பதாயும், பாரதத்திடமிருந்தே ஈரானியப் பெண்கள் உத்வேகம் பெற்ருர்கள் என்றும் கூறினர்.

கென்யா பிரதமரின் புதல்வி செல்வி மார்கரட் கென்யாட்டா பேசுகையில் கென்யா மாதர்கள், பாரதத் தலைவர்களிடமிருந்தே ஊக்கம் பெற்ருர்கள் எனக்கூறினர்.

# "தமிளத்தில்" எழுதிய விடைத்தாள்கள்!

கொழும்பு, வியாழன்

அண்மையில் நடைபெற்ற சிரேஷ்ட தாரதரப் பரீட்சைக்குரிய விடைத்தாள்களுக்கு மதிப்பெண் வழங்குவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இவ்விடைத்தாள் அனுப்பப்பட்ட மேலுறையில "தமிளத்தில்" எழுதிய விடைத்தாள்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழில் எழுதிய விடைத்தாள்கள் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாகவே இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் எழுதிய விடைத்தாள்கள், சிங்களத்தில் எழுதிய விடைத்தாள்கள் என்று கூறுவதுபோல், தமிளத்தில் எழுதிய விடைத்தாள்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. "தமிளம்" என்று புதிய ஒரு சொல் ஆக்கப்பட்டுள்ளதோ!

# "ஆபிரிக்காவில் சீன, பாக். பிரசாரம் பலனளிக்கவில்லை"

## இந்தியாவுக்கே பேராதரவு என்கிருர் ஸ்ரீமதி காந்தி

புதுடில்லி, ஜன. 2

ஆபிரிக்க மக்கள் இந்தியா மீது பேரன்பு கொண்டிருப்பதாக அங்கு சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத்திரும்பிய ஸ்ரீமதி இந்திராகாந்தி நிருபர்களிடம் கூறினர்.

"இந்திய விடுதலைப்போராட்டமே தங்கள் விடுதலைக்கு ஊக்கமளித்ததாய் ஆபிரிக்க மக்கள் கூறுகிருர்கள்" என்றும் அவர் கூறினர்.

"சீன ஆக்கிரமிப்பை அவர்கள் நன்கு அறிந்துள்ளார்கள். இந்தியாவுக்கே அவர்கள் ஆதரவு தெரிவிக்கிருர்கள். இரண்டாவது ஆசிய ஆபிரிக்க மகாநாட்டுக்குப் பதிலாக மண்டல சார்பற்ற மகாநாடு நடைபெறுவதையே பல ஆபிரிக்கத் தலைவர்கள் ஆதரிக்கிருர்கள்" என்றும் ஸ்ரீமதி காந்தி கூறினர்.

'பாகிஸ்தான் ஆபிரிக்க நாடுகளில் நடத்திவரும் பிரசாரம் அதன் நோக்கத்தையே கெடுத்து வருகிறது' என்றும் அவர் கூறினர்.

ஸ்ரீமதி காந்தியுடன் சென்றிருந்த வெளிநாட்டு உதவி மந்திரி திரு. தினேஷ்சிங் பேசுகையில் ஆபிரிக்காவில் பாரதத்துக்கிருக்கும் ஆதரவைக் குறைக்க சீன பெரும் பிரச்சாரம் செய்துவருவதாயும் ஆனல் அது பலிக்கவில்லை என்றும் கூறினர்.

# காங்கிரஸ் காரியக் கமிட்டியின் ஜனநாயக சோஷலிஸ தீர்மானம்

## அரிசி ஆலைகளை கூட்டுறவுக்கு மாற்றச்சிபார்சு

புதுடில்லி, ஜன. 2

தனிப்பட்டவர்களின் வருமானம், சொத்து ஆகியவற்றுக்கு வரம்புகட்டுதலும், தனிப்பட்ட அரிசிஆலைகள் போன்றவற்றைக் கூட்டுறவுத்துறைக்கு மாற்றுதலும் சோஷலிஸ்ட்லட்சியத்தை அடைவதற்காக காங்கிரஸ் காரியக்கமிட்டி தயாரித்துள்ள நகல் தீர்மானத்தில் அடங்கியுள்ள விஷயங்களாகும்.

2500 வார்த்தைகளடங்கிய காரியக்கமிட்டியின் இத்தீர்மானம் அடுத்தவாரம் புவனேஸ்வரத்தில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

வரவு, முதலீடு போன்றவற்றுக்கு அரசாங்க வழிகாட்டல், அத்தியாவசியத் துறையில் கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றில் அரசாங்கத் துறையை விரிவுபடுத்தல், கைத்தொழில் துறையில் தொழிலாளரின் தொடர்பு ஆகியனவும் நகல்மசோதாவில் இடம்பெற்றிருக்கின்றன.

ஆனல் தகராறுக்கான வங்கிகள் தேசியமயம்பற்றி தீர்மானத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஜனநாயக சோஷலிஸமானது ஜனநாயகம், தனிநபரின் கௌரவம், சமூகநீதி ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டுமென தீர்மானம் கூறுகிறது.

வறுமை, நோய், அறியாமை ஆகியவற்றை ஒழிக்கும் சமுதாயத்தை, சொத்து, சலுகை ஆகியன வரம்புக்குட்பட்டசமுதாயத்தை அமைப்பதை அது வற்புறுத்துகிறது. எல்லா பிரஜைகளும் சமம் என்ற அந்தஸ்து வலியுறுத்தப்பட்டுள்ளது. உணவு, உடை, வீடு, கல்வி, சுகாதாரம் ஆகியமக்களின் அடிப்படைத் தேவை 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் சாதிக்கப்படவேண்டிய அவசியத்துக்கு நகல்தீர்மானம் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது.

வர்த்தகம், கைத்தொழில் ஆகியவை அரசாங்கத்துறையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தேசிய அபிவிருத்தித்திட்டத்தில் தனியார் துறை பரந்த அளவில் முக்கிய இடம் வகிக்க வேண்டும் என்றும் அதுகூறுகிறது. தனியார் துறையில் கூட்டுறவு முக்கியத்துவம் வகிக்க வேண்டும் என்றும் குறிப்பாக விவசாயம், சிறுகைத்தொழில் ஆகியவற்றில் முக்கியத்துவம்வகிக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது. காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் பொதுவாக தீர்மானத்தை ஆதரித்தபோதிலும் வங்கிகள் தேசியமயம் குறித்து எதுவும் குறிப்பிடப்படாததற்கு அதிருப்தியடைந்துள்ளனர். புவனேஸ்வர் மகாநாட்டில் தீர்மானம் வரும்போது இப்பிரச்னையைக் கிளப்பப் போவதாய் இரு அங்கத்தினர்கள் கூறினர்.

தீர்மானத்தின் வாசகம் வங்கிகள் தேசியமயத்தை ஆதரித்தோ எதிர்த்தோ எதுவும் குறிப்பிடவில்லை.

# கரன்சிங்

ஸ்ரீநகர், ஜன. 2

காஷ்மீரில் காணமற்போன புனித சின்னங்களை மீட்க பூரண நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என காஷமீர் மன்னர் கரன்சிங் ரேடியோவில் பேசும்போது கூறினர்.

# அமெரிக்க உறவுக்கு கியூபா தயார்

ஹவானு, ஜன. 2

அமெரிக்காவுடன் மீண்டும் ராஜீய உறவை மேற்கொள்ள கியூபா தயாராய் இருப்பதாயும், ஆனல் இதற்கு அமெரிக்காதான் முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கியூபா பிரதமர் பிடல் காஸ்ட்ரோ அறிவித்தார். காலஞ்சென்ற திரு. கென்னடி அதை உணர ஆரம்பித்திருந்தார் என்றும் அவர் கூறினர்.

# ஒஸ்வால்ட் ஜெனரல் வாக்கரை சுட்டாராம்

டல்லாஸ், ஜன. 2

ஜனதிபதி கென்னடியைக் கொலைசெய்ததாகக் கூறப்படும் ஒஸ்வால்டின் ரஷ்ய மனைவி, மேஜர் ஜெனரல் எட்வின் வாக்கரைச் சுட்ட சம்பவத்தில் தமது கணவன் சம்பந்தப்பட்டதாகக் கூறியிருக்கிருர்.

ஜெனரல் வாக்கர் சுடப்பட்ட அன்று தனக்கு எழுதி வைத்த குறிப்பொன்றில் தான் கைதுசெய்யப்படக்கூடும் என ஒஸ்வால்ட் எழுதி வைத்திருந்ததாகக் கூறினர்.

கடந்த ஏப்ரல் 10-ம் திகதி ஜெனரல்வாக்கர் வீட்டிலிருந்த போது அவர்மீது சுடப்பட்ட குண்டு குறிதவறியதால் அவர் தப்பிக்கொண்டார்.

# மைசூரும் பின்பற்றும்

பங்களூர், ஜன. 2

மகாராஷ்டிராவில் மதுவிலக்குச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாறுதல் காலத்திற்கேற்றது என்றும், மைசூரும் இதைப் பின்பற்றுவது பற்றி ஆலோசிக்கலாம் என்றும் முதன்மந்திரி கூறினர்.

# பாதுகாப்பு நிதி ரூ. 57 கோடி

புதுடில்லி, ஜன. 2

இந்தியப் பாதுகாப்பு நிதிக்கு கடந்த டிசம்பர் 31 ம் திகதி வரை ரூ. 57,08,00,000 சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதில் 28 லட்சம் ரூபாய் பிரிட்டனிலிருந்தும், 62 லட்சம் ரூபாய் இதர நாடுகளிலிருந்தும் கிடைத்துள்ளது. 22,77,000 கிராம் தங்கமும், தங்க நகைகளும் சேர்ந்துள்ளன.

# ஸ்ரீநகர் புனித கேசம் பற்றிய விசாரணை முன்னேற்றம்

## இந்திய அதிகாரிகள் திருப்தி

ஸ்ரீநகர், ஜன. 2

முகம்மதுநபியின் புனித கேசத்தை அகற்றியது யார் என்பதைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாய் காஷ்மீர்பிரதமர் திரு. ஷம்சுதீன கூறினர்.

இதுசம்பந்தமான விபரங்களை மேலும் அவர் வெளியிடவில்லை எனினும் இந்த முன்னேற்றம் குறித்து உயர்தர இந்திய அதிகாரிகள் திருப்தி தெரிவித்திருப்பதாக அவர்நிருபர்களிடம் கூறினர்.

ராஜ்யத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் முன்னிட்டு, ஸ்ரீநகரிலிருந்து அனுப்பும் பத்திரிகைச் செய்திகளுக்கு அரசாங்கம் தடைவிதித்திருப்பதாய் அவர் கூறினர்.

நேற்று ஸ்ரீநகரில் 3 மைல் நீளமான பெரிய ஊர்வலம் கறுப்புக் கொடிகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கிக் கொண்டு பவனி வந்தது.

இந்தச் சின்னம் காணமற்போனதற்கு எவர் பொறுப்பாயிருந்தபோதிலும் அவர் காஷ்மீரில் குழப்பத்தைஉண்டு பண்ண முயன்றிருக்கிருர் என பிரதமர் நேரு தெரிவித்தார். "இவ்விதக் குற்றம் செய்தவர் இந்தியாவுக்கோ, காஷ்மீருக்கோ நண்பர் அல்ல என்பது மட்டும் தெளிவு" என்றும் அவர் கூறினா

# கப்பல் மீட்பு

சிங்கப்பூர், ஜன 2

இந்தோனேஷிய கடலில் தரை தட்டிய இந்தியக் கப்பல் மகம்மதி சிங்கப்பூருக்கு இழுத்து வரப்பட்டது.

# சைப்ரஸ்

நிக்கோஸியா, ஜன. 2

1960-ம் ஆண்டு சைப்ரஸ் விடுதலையின் போது செய்து கொள்ளப்பட்ட நேச கூட்டுறவு, உத்தரவாத ஒப்பந்தத்தை ரத்து செய்யப்போவதாய் ஜனதிபதி ஆர்ச்பிஷப் மக்காரியோஸ் அறிவித்தார்.

# புதுவருட கௌரவ பட்டம்

லண்டன், ஜன. 2

இலங்கை ராயல் கடற்படையில் கடமையாற்றிவிட்டு 3 மாதங்களுக்குப்பின் இங்கிலாந்து திரும்பிய குருப் காப்டன் கென்னத்ரிச்லிக்கு ஸி. பி. ஈ. பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

1921-ல் இலங்கை வந்து தோட்டத்துரையாக பிரிட்டிஷ் நலன்களுக்குச் சேவை செய்த திரு. லைக்காம்டல்லிங்குக்கு ஓ. பி. ஈ பட்டமும், குருத்தலாவ சென். தோமஸ் கல்லூரியின் முன்னுள் தலைமை ஆசிரியர் திரு. டபிள்யு ஆர் லெண்டன் ஹேமனுக்கு எம். பி. ஈ. பட்டமும் வழங்கப்பட்டது.

# கென்யாவின் அதிர்ஷ்டம்

நைரோபி, ஜன. 2

கென்யாட்டா போன்ற தலைவர்களைப் பெற்றிருப்பது கென்யாவின் அதிர்ஷ்டமே என்றும், அவரது திறமைமிக்க தலைமையின் கீழ் கென்யா மக்கள் முன்னேறிச் செல்வார்கள் என்றும் இங்குள்ள இந்தியத்தூதர் திரு. டாண்டன் கூறினர். பாரதம், கென்யா இரு நாட்டுத் தலைவர்களிடையேயும் நல்லெண்ணம் இருப்பதாயும் அவர் குறிப்பிட்டார்.

# ஜெனரல் ராஜேந்திரசிங்ஜி பம்பாயில் காலமானர்

ஜாம்நகர், ஜன. 2

இந்திய ராணுவத்தின் முன்னாள் தலைவர் ஜெனரல் ராஜேந்திரசிங்ஜியின் அந்திமக்கிரியைகள் இன்று ஜாம்நகரில் முழு ராணுவமரியாதையுடன் நடைபெறும். ஜெனரல் ராஜேந்திர சிங்ஜி பம்பாயில் ராணுவஆஸ்பத்திரியில் நேற்று காலமானர்.

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் நவநகர் ஜாம்சாகிபுக்கு, ராஜேந்திரசிங்ஜியின் மறைவுக்காக அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிருர். 64 வயதான ஜெனரல் ராஜேந்திர சிங்ஜி "ஸாந்தர்ஸ்ட்" ராணுவக்கல்லூரியில் பயின்று 34 ஆண்டுகள் சிறப்பாகச்சேவை புரிந்தவர். 2-ம் உலகப்போரில் கலந்து கொண்ட அவருக்கு வீரச் செயல்களுக்காக விருது அளிக்கப்பட்டது.

# டெஸ்ட் கிரிக்கெட்

பிரிஸ்பேன், ஜன. 2

ஆஸ்திரேலியாவுக்கும் தென்னபிரிக்காவுக்குமிடையே நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா விக்கெட் நஷ்டமின்றி 76 ரன்கள் எடுத்தது.

# 3 கிரேக்கர் மாண்டனர்

நிக்கோஸியா, ஜன, 2

நேற்று நிக்கோஸியாவில் நடைபெற்ற வகுப்புச்சண்டையில் 3 கிரேக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். புதிதாக 600 பிரிட்டிஷ் துருப்புக்கள் அங்கு சென்றிருக்கின்றன.

# நட்புறவை வளர்க்க ஜோன்ஸன் உறுதி

வாஷிங்டன், ஜன. 2

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே மேலும் உறவில் அபிவிருத்தி ஏற்படத் தாம் உழைக்க விரும்புவதாய் ஜனதிபதி ஜோன்ஸன் சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கும் ஜனதிபதி பிரஸனேவுக்கும் அனுப்பியுள்ள புதுவருடச் செய்தியில் கூறியிருக்கிருர்.

பிரிட்டிஷ் பிரதமர் சர் ஹியூமுக்கு திரு. குருஷ்சேவ் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் 1963-ம் ஆண்டு சர்வதேச நிலையில் ஏற்பட்ட சாதனை பற்றித் தாம் திருப்தியடைவதாகக் கூறியிருக்கிருர். சர் ஹியூம் அனுப்பியுள்ள பதிலில் இதை அங்கீகரித்து வாழ்த்தியிருக்கிருர்.

# முதியோர்பென்ஷன்

புதடில்லி, ஜன. 2

பஞ்சாபில் முதியோர் பென்ஷன் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வேலைசெய்யாத 65 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் இதன்படி மாதம் 15 ரூபாய் வழங்கப்படும்.

# சுகார்ணே பிலிப்பைன்ஸ் விஜயம்

ஜாகர்த்தா, ஜன. 2

இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்ணே வருகிற செவ்வாய்க்கிழமைபிலிப்பைன்ஸுக்கு விஜயம் செய்வாரென்றும், தென்கிழக்காசிய ராணுவ நாச வேலைகளிலிருந்து பாதுகாக்க இரு நாடுகளும் திட்டம் வகுக்குமென்றும் முதலாவது உதவிப் பிரதமர் டாக்டர் சுபந்திரியோ கூறினர்.




# இப்போது சுகம், பெலன், சந்தோஷம் இவற்றையும் அளியுங்கள்

சின்னஞ் சிறு சிசு தனக்கு வேண்டிய சக்தியை பிறக்கு முன்பே தன் தாயிடமிருந்து பெற்றுக் கொள்கிறது.

ஆனால் வளரும்போதோ அந்த சிறு உடம்பின் வளர்ச்சிக்கு அநேக விட்டமின் சத்துகள் தேவைபடுகின்றன. சுக வளர்ச்சிக்கும், சிறந்த கண்பார்வைக்கும் விட்டமின் A. உறுதியான எலும்புகளுக்கும், பற்களுக்கும் விட்டமின் D, திடமான உடம்பிற்கும், மாசற்ற சருமத்திற்கும் விட்டமின் C தேவைப்படுகின்றன.

**இவ்விட்டமின்கள் அனைத்தையும் உங்கள் குழந்தை பெறுகிறது என்று நீங்கள் எப்படி நிச்சயிக்கக்கூடும்?**

மீன் எண்ணெயும், தோடம்பழச்சாறும் இவ்விட்டமின் சத்துகள் அடங்கியவைதான். ஆனால் மீன் எண்ணெயின் பிசுபிசு தன்மையின் காரணமாக குழந்தைகளுக்கு அதை ஊட்டுவது எளிதல்ல. மேலும் சில வேளைகளில் மீன் வாடை கொண்ட ஏப்பம் வரக்கூடுமானதால் அநேக குழந்தைகள் இதை உட்கொள்ள விரும்பமாட்டார்கள். ஹலிபோரேஞ் உட்கொள்வதில் இச்சச்சரவுகள் ஏற்படுவதில்லை. குழந்தையின் சுக வளர்ச்சிக்கு வேண்டிய A, D, C விட்டமின் சத்துகள் அனைத்தும் அதில் அடங்கியுள்ளன. அது ருசி மிக்கது. (சாதாரண தோடம்பழத்தை விட இனிப்பானது.) மீன் வாடை அல்லது மீன் சுவை அதில் இல்லை. சிசுகளும், சிறு குழந்தைகளும் ஹலிபோரேஞ்சை அதிகம் விரும்புகிறார்கள்,




இதோர் கிளாக்ஸோ அலன்பரீஸ் உற்பத்தி.

இளம் பிராயத்தின் ஆரோக்கியத்திற்கு

# ஹலிபோரேஞ்

இதுவே சக்தி மிகுந்த வளர்ச்சிக்கு ஏற்றது

AT-821

## சிமிந்திகூட்டு ஸ்தாபன சபை

### தொழிலாளருக்கு இடமளிக்க கோரிக்கை

நல்லூர், வியாழன்

சிமிந்திக் கூட்டுஸ்தாபன சபையில் சிமிந்திச் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் இருவருக்கு இடமளிக்கவேண்டுமென இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் சிமிந்திக் கூட்டுத்தாபன தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தொழிற்சங்க சம்மேளனப் பொதுக் காரியதரிசி திரு. என். சண்முகதாசன் அனுப்பி வைத்துள்ள 19 கோரிக்கைகளில் முக்கியமான விபரங்கள் வருமாறு:

வாரத்தில 45 மணி நேர வேலையையே தொழிலாளர்கள் செய்ய வேண்டும்.

தொழிற்சாலை வளவில் தொழிலாளர் யூனியன் கந்தோர் அமைக்க வசதி செய்து தரவேண்டும்.

இரவில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தங்கும் வசதி ஏற்படுத்தவேண்டும்.

நிரந்தர ஊழியர்களுக்கே காலியாகும் உயர் பதவிகள் வழங்கவேண்டும்."

கூட்டுத்தாபனத் தலைவருக்கும் தொழிற்சங்க சம்மேளனக் காரியதரிசிக்குமிடையே பேச்சுவார்த்தை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## சகோதரியுடன் சண்டையிட்டவர் தற்கொலை

பையாகலை, வியா.

கம்புக்குளன்லும் இடக்கைச் சேர்ந்த 21 வயது யுவதி ஒருவர் தனது சகோதரி ஒருவருடன் சண்டை பிடித்துவிட்டு ஆத்திரம் கொண்டவராய் அசெற்றிக் அசிட்' திராவகத்தை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். இத்தகவல் யசாவதி என்ற யுவதியின் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை செய்துகொண்டவரின் மூத்த சகோதரியான ஆர். டி. குசுமாவதி தனது சாட்சியத்தின் போது தெரிவித்ததாவது:- "சம்பவம் நடந்த தினம் எமது தாயார் பக்கத்திலுள்ள தோட்டத்துக்கு தண்ணீர் அள்ளுவதற்காகப்போயிருந்தார். நானும் எனது இளைய சகோதரியான யசாவதியும் மையலறையில் மையல் செய்துகொண்டிருந்தோம். அப்போது எமக்கிடையே சிறுவாக்குவாதம் ஏற்பட்டது. தாயார் வந்தபின்னர் சகோதரியை இவ்விதம் வாக்குவாதத்தில் ஈடுபடுவதையிட்டு கண்டித்தார். சிறிது நேரத்தின் பின்னர் எனது சகோதரி மயக்கமுற்று விழுந்தார். அவருக்குப் பக்கத்தில் திராவகப் போத்தல் ஒன்று இருந்தது.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பிக்குகளை நீக்க தீர்மானம்

மீரிகம, வியா.

பத்திரிகைக் கமிஷன் சிபார்சுகளை செயல்படுத்த வேண்டுமென்ற தீர்மானமும், பிக்குகளை அரசாங்க உத்தியோகங்களிலிருந்து நீக்கவேண்டுமென்ற தீர்மானமும் ஹமன்கல கிராம சபையில் நிறைவேற்றப்பட்டது.

## வெளிநாட்டு உதவி தேவை

### அயூப் பேச்சு

ராவல்பிண்டி, ஜன. 2

பாகிஸ்தான், வெளிநாட்டு உதவியை அதிகம் நம்பியிருக்க வேண்டியுள்ளது என ஜனாதிபதி அயூப்கான் கூறினார். இந்தியாவுக்கு மேற்குநாடுகள் ஆயுத உதவி அளிப்பது பாகிஸ்தானுக்கு அபாயத்தை உண்டுபண்ணியிருக்கிறது என்றும் அவர் கூறினார்

‘தமிழ் பிள்ளைகளுக்கு

# ஆங்கிலமே இரண்டாவது கட்டாயபாடமாகவிருக்கவேண்டும்’

## சிங்கள எதிர்ப்பு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன் "மாநகரசபை மண்டபத்தில் கூடியிருக்கும் பல்லாயிரக் கணக்கான யாழ்ப்பாண மாவட்ட மக்களாகிய நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சிங்களம் படிப்பிக்கக்கூடாதென்றும், அப்படிப் படிப்பிப்பதற்குச் சிங்கள ஆசிரியர்களை நியமனம் செய்யும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்குமாயின் அதை உடனடியாகக் கைவிடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேலும் சிங்களக் குழந்தைகளுக்கு ஆங்கிலம் எவ்வாறு இரண்டாவது கட்டாய பாடமாகப் போதிக்கப்படப் போகின்றதோ அதே முறையில் தமிழ்க் குழந்தைகளுக்கும் ஆங்கிலமே இரண்டாவது கட்டாயப் பாடமாகப் போதிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்".

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் கூடபெற்ற சிங்கள எதிர்ப்புக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களின் கரகோஷத்திற்கிடையே மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஊர்காவற்றுறையில்**

தனிச்சிங்களச்சட்ட அமுலாகும் தினத்தையொட்டி நேற்று இங்கு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. பட்டினத்தின் பிரதான இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. கடைகள் எல்லாம் பூட்டப்பட்டிருந்தன. தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். கிராமப் புறங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

**பருத்தித்துறையில்**

சிங்களத் திணிப்பை முன்னிட்டு நேற்று பருத்தித்துறையில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் யாவும் பூட்டப்புட்டிருந்தன. வியாபாரம் செய்வதற்கு மக்கள் சந்தைக்கு வரவில்லை. மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகக் காணப்பட்டதால் பட்டினம் முழுவதும் சோகமாகக் காட்சியளித்தது. சந்தைகளிலும், கடைகளிலும் கறுப்புக்கொடிகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக ஏராளமான மக்கள் இங்கிருந்து சென்றார்கள்.

**கொடிகாமத்தில்**

சிங்களத்தை அமுல் செய்யும் தினமான நேற்று கொடிகாமத்தில் சந்தை நாளாக இருந்த போதிலும், மக்கள் எவரும் சந்தைகக வரவில்லை. எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. சிங்கள எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக இங்கிருந்து பலர் யாழ்ப்பாணததிற்கு சென்றனர். இங்கு நடைபெற்ற பூரண கடையடைப்பில் முஸ்லீம் வர்த்தகர்களும் ஒத்துழைத்தார்கள். இதற்கு முன் நடைபெற்ற ஹர்த்தால்களிலும் துக்க தினங்களிலும், ஒற்றைக் கதவில் வியாபாரம் செய்த கடைகள் கூட இன்று முழுவதும் முற்றாக மூடப்பட்டிருந்தன.

**சாவகச்சேரியில்**

இங்கு எல்லாக் கடைகளும் முற்றாக பூட்டப்பட்டிருந்தன. கடைகளில் கறுப்புக்கொடிகள் தொங்கவிடப்பட்டது. நகரமெங்கும் அமைதி நிலவியது. சிங்கள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக இங்கிருந்து பலர் அதிகாலையிலேயே யாழ்ப்பாணம் சென்றனர். தமிழரசுக் கட்சி மாதர் முன்னணியை சேர்ந்தவர்களும் இங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றார்கள். வீதிகளில் வாகனப் போக்குவரத்தும் அதிகமாகக் காணப்படவில்லை.

**தெல்லிப்பழையில்**

நேற்று தெல்லிப்பழை தமிழரசுக் கட்சி கிளையில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டது. கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. சில கடைகளில் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டன. சிங்கள சட்ட பிரதி எரிப்பில் கலந்துகொள்வதற்காக தெல்லிப்பழை தமிழரசு கட்சி கிளைத் தலைவரின் தலைமையில் ஏராளமான ஆண்களும் பெண்களும் யாழ்ப்பாணம் சென்றார்கள். பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

**சுன்னாகத்தில்**

சுன்னாகத்தில் நேற்று சந்தை நாளாக விருந்தும், கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. தேநீர்க்கடைகளும் கூட்டுறவு கடைகளும் மூடப்பட்டிருந்தன. சிங்கள சட்ட அமுலுக்கு இந்த பூரண எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 3-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-45 கே. சிவசுப்பிரமணியம் — தோத்திரப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி.

இரவு 7-15 ஆர். வடிவேல் — கதாப்பிரசங்கம், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 நேயர்விருப்பம், 10-00 இசையமுதம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-45 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-50 துதிப்பாடல்கள், 7-00 காந்திஅஞ்சலி, 7-30 இசைக் கோவை, 8-15 தியாகராஜ உற்சவம் (திருவையாறு அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு. 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 வயலின்.

மாலை 3-00 தியாகராஜ உற்சவம் (திருவையாறு அஞ்சல்), 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம் — சித்திரம், 7-45 தியாகராஜஉற்சவம் (திருவையாறு அஞ்சல்)

---

## திருக்கேதீச்சர சிரமதானம்

திருக்கேதீச்சரம், வியா. கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் கடந்த மாதம் 22-ம்தேதியிலிருந்து 30-ம்தேதி வரை திருக்கேதீச்சரத்தில் சிரமதான இயக்கத்தில் ஈடுபட்டனர். இவ்வியக்கத்தில் மாத்தளை, திருக்கோணமலை, குருக்கள்மடம், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் உள்ள தொண்டர்கள் கலந்துகொண்டனர். இத்தொண்டர்கள் அரிய பணிகளை ஆற்றியுள்ளனர்.

தொண்டர்கள் பாலாவியை அடுத்துள்ள அணைக்கட்டுகளில் மேலும் மண்போட்டு, தண்ணீர் வெளியே பாயவிடாது தடுத்து நிறுத்தினர். இதனால் திருவாதிரையன்று தீர்த்த உற்சவம் நடைபெறக் கூடியதாக இருந்தது. கோயில் வீதிகளைச் சுற்றி வளர்ந்திருந்த மரம், செடிகளை அப்புறபபடுத்தி, அவற்றை நல்ல முறையில் ஆக்கினர். இந்து வாலிபர் சங்கம் தாம் ஒரு கட்டடம் எழுப்ப உத்தேசித்துள்ள நிலத்தில் வளர்ந்திருந்த புல் பூண்டுகளை அகற்றி அந்நிலத்தைச் சுத்தம் செய்தனர். தொண்டர்கள் காயப்பட்ட தொண்டர்களுக்கு முதலுதவி ஆற்றினர். மேலும் கண்டெடுத்த மோதிரம், சங்கிலி, கைக்கடிகாரம் ஆகிய பொருட்களை அவற்றினுரிமையாளரிடம்சேர்ப்பித்தனர். இலங்கையின் பல பகுதிகளிலும் உள்ள இயக்கங்கள் கலந்துகொண்ட கருத்தரங்கில் அகில இந்து இளைஞர் சங்கம் ஒன்று நிறுவுவது மிகவும் அவசியமானது என்ற கருத்தை வெளியிட்டனர்.

---

## ‘மந்திரக் கம்பளமாக மாறிய கௌபீனம்’

காலி, வியாழன் தான் கௌபீனம் அணிந்தது துணிப்பஞ்சத்தை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் என்று காலி எம். பி. திரு. தகநாயக்கா இங்கு நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றில் பேசுகையில் தெரிவித்தார். பொதுமக்களின் கஷ்டத்தை எடுத்துக் காட்டுவதற்காகவே தான் இவ்விதம் செய்துள்ளதாகவும், இதுபற்றி 150 கடிதங்கள் தனக்குக்கிடைத்துள்ளதாகவும் திரு. தகநாயக்கா மேலும் தெரிவித்தார். தான் அணிந்த கௌபீனம் ஒரு மந்திரக் கம்பளம் எனவும் அதனாலேயே ஒரு உதவி மந்திரி ஜப்பானுக்கு துணி விஷயமாகச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

---

## உளவறிந்த ராஜதந்திரிக்கு மரணதண்டனை

சோபியா, ஜன. 2

முன்னாள் பல்கேரிய ராஜதந்திரி திரு. எச். ஜார்ஜிவ் அமெரிக்காவுக்கு உளவறிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் மரணதண்டனைவிதிக்கப்பட்டது. இவர் சுட்டுக் கொல்லப்படுவார். 56 வயதான ஜார்ஜிவ் அரசியல், பொருளாதார, ராணுவ ரகசியங்களை அமெரிக்கா, பாரிஸ், ஜெனிவா, வீயன்னா ஆகிய இடங்களில் அமெரிக்க உளவாளிகளிடம் தெரிவித்ததற்காக அவருக்கு 2,00,000 பவுண் வழங்கப்பட்டதாம். தனது பல காதலிகளைப் பராமரிப்பதற்கும் அமெரிக்கா ஆயிரக்கணக்கான டாலர்களைச் செலவழித்ததாய் ஜார்ஜிவ் நீதி மன்றத்தில் கூறினர்.

திரு. ஜார்ஜிவிடமிருந்து பெற்று, சேமிப்பு வங்கிகளில் முடக்கப்பட்டிருந்த மூன்று பெண்களின் பணத்தை பறிமுதல் செய்யுமாறும், திரு. ஜார்ஜிவின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. வழக்குச் செலவைக் கட்டுமாறும் ஜார்ஜிவுக்கு உத்தரவிடப்பட்டது.

---

## இந்தியாவரும் இலங்கை கோஷ்டி

புதுடில்லி, ஜன. 2

இலங்கைகிரிக்கெட்கோஷ்டி ஒன்று விரைவில் இந்தியா வரவிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## ‘தமிழ்மொழியில் கருமம் ஆற்றுவோம்’

### பட்டினசபை தீர்மானம்

ஊர்காவற்றுறை, வியாழன் ‘தமிழ்மொழியில் கருமம்ஆற்றுவதோடு அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்வோம்’ என அண்மையில் கூடிய ஊர்காவற்றுறை பட்டினசபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபைத்தலைவர் திரு. கே. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அல்பிரட், திரு இம்மானுவேல் ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். பஸ தரிக்குமிடத்திற்குரிய பணத்தை இ. போ. ச. இதுவரை தரவில்லையென்றும் மேற்கொண்டு பஸ்காலையை இ. போ. ச. வுக்குவிடுவதில்லையென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கபபட்டுள்ளது. வீதிகள் திருத்துவதற்காக அரசினரிடமிருந்து உதவி பெறவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## சாராய வழக்கில் எதிரிக்கு அபராதம்

பருத்தித்துறை, வியாழன் நாகர்கோவிலைச் சேர்ந்த தம்பையா சங்கரப்பிள்ளை என்பவர்மீது உத்தரவின்றி சாராயம் விற்றதாகக் குற்றம்சாட்டப்பட்டு கலால் இலாகா பரிசோதகர் திரு எஸ். எம். வீரசூரியாவால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே, நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் 100 ரூபா அபராதம் விதித்தார்.

---

## இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை

### செனட்டர் பிரேரணை

கொழும்பு, வியாழன் "வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான விஷயங்களில் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு, உண்மையில் குறிப்பிட்ட சில வல்லரசுகளுடன் கூட்டுச்சேரும் கொள்கைக்கு இவ்வரசாங்கம் அடிபணிந்துள்ள காரணத்தால், இந்த அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் இச்சபைக்கு நம்பிக்கை ஏற்படவில்லை".

மேற்கண்ட பிரேரணையை வருகிற 7-ம் திகதி செனட் சபையில் திரு. டி. ஈ. வி. திஸநாயக்க கொண்டுவருவார்.

---

## கொழும்பு யோசனை: வினோபா ஆதரவு

ராய்ப்பூர், ஜன. 2

கொழும்பு யோசனைகளை இந்தியா ஏற்றதின் மூலம் அதன் தார்மீக பலம் அதிகரித்திருப்பதாயும், சீனவும் ஏற்கவேண்டுமென்றும் ஆச்சாயார் வினோபாஜி கூறினர்.

நாடு முழுவதும் மதுவிலக்குச்சட்டம் அமுலாக வேண்டும் என்று கூறிய அவர், மகாராஷ்டிராவில் மதுவிலக்குச்சட்டம் தளர்த்தப்பட்டது குறித்து பூராவிபரம் தெரியும் வரை, அதுபற்றி கருத்து தெரிவிக்க முடியாதென்றார்.

---

## நேரு - அயூப் வாழ்த்து

புதுடில்லி, ஜன. 2

இந்தியப் பிரதமர் நேருவும் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானும் பரஸ்பரம் புதுவருட வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

---

## 1964-ல் ரூ. 100 கோடி ஆயுத உற்பத்தி

புதுடில்லி, ஜன. 2

1964-ம் ஆண்டில் இந்தியாவில் ஆயுத உற்பத்தி ரூ 100 கோடியைத் தாண்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1962-63-ல் 63.90 கோடிக்கு ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.


## வரி விளம்பரம்

வெலிங்டன் சந்தி சூரியப் பிரகாஸ் ஸ்ரோஸை மறந்து விடாதீர்கள்!

எங்களிடம் எல்லவகை பெயின்ற்—வார்னிஸ் டிஸ்ரெம்பர், தின்னர், பில்லர், பிறைமர்-கார்ஸ்பிறே பெயின்ற் வகைகளும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். 1547

---

**நிருபர் தேவை**

திருக்கோணமலை, மூதூர், கல்முனை ஆகிய இடங்களில் நிருபர் தேவை. விண்ணப்பிக்கவும்: ஆசிரியர், "ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

---

**அரைச் சலார்**

உங்கள் அபிமான ஸ்ருடியோவுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள். ஸபாஸ் ஸ்ருடியோ 11, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1805

---

**தேவை**

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வீடு கட்டக்கூடிய இரண்டிலிருந்து மூன்று பரப்பு வரையான காணி தேவை. பரப்பு விலை 4000 ரூபாவிலிருந்து 5000 ரூபாவரை. உத்தரவாதமும் திருப்தியுமுடைய உறுதியுடனிருக்க வேண்டும். விண்ணப்பிக்க:- 1817, C/o. ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 1817

---

**‘ஐந்து கண்டங்கள்’**

சிறுவர்களுக்குப் பயன் தரும் நூல். விலை சதம் 10. தபாலில் பெறவிரும்புவோர் இரண்டு பத்துச்சத முத்திரைகளுடன் விண்ணப்பிக்கவும். சாரதா புத்தகசாலை, தேவாலய வீதி, யாழ்ப்பாணம். 1825

---

**விற்பனைக்கு**

6 1/4 ஏக்கர் வயல், வேளாண்மையுடன், நீர்ப்பாய்ச்சல், 8-ஆம் வாய்க்கால், தென்னைகளுள்ள நிலம் உண்டு. பஸ் நிலையம் 3/4 மைல். புகையிரத நிலையம் 3 மைல். க. செல்லையா, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். 1823

---

**வீடு வாடகைக்கு**

53, அரசடி ரோட்டு, சீனியர் ஒழுங்கைச் சந்தி, இந்துமகளிர் பள்ளிக்கூடத்துக்குச் சமீபத்தில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு, உடனடியாக வாடகைக்குக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு விஜயம்செய்யவும். 1829

---

**கன்வஸர்கள் தேவை**

தரத்திலும் குணத்திலும் சிறந்த பிரசித்தி வாய்ந்த பற்பொடிக்கு வடமாகாணம் முழுவதற்கும் கன்வஸர்கள் (Canvassers) தேவை. பிணைப் பணம் ரூபா 250/-. சம்பளம் மாதம் 100 ரூபாவும் கமிஷனும். விரும்புவோர் தராதரத்தையும், அனுபவத்தையும் குறித்து கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். சோ. நரசிங்கம், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். 1830


---

## ஆசிரியர் இடமாற்றம்

மீரிகம, வியா. நீர்கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த விவாகமாகாத ஆசிரியர்களை கிழக்குமாகாணத்துக்கு மாற்றுவதென்ற கல்வி இலாகாத் தீர்மானத்தை ஆட்சேபிக்குமுகமாக இங்கு ஒரு ஆசிரிய சங்கம் ஒன்று புதிதாக அங்குரார்பபணம் செய்யப்பட்டது.


வியாபார பெருக
விளம்பரம் செய்க

# "சிங்களச் சட்ட அமுலை வாபஸ்பெறவும்"

## சமசமாஜ கிளைகாரியதரிசி அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்பேசும் மக்கள்மீது சிங்களத்தைத் திணிக்கும் கொடுரமான நடவடிக்கையை வாபஸ்பெறுமாறும் தமிழ் பேசும் மக்கள் அவர்களுடைய தமிழ் மொழியிலேயே நிர்வகிக்கப்பட வேண்டுமென்றும் லங்கா சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக்கிளையின் காரியதரிசி திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் ஒரு அறிக்கையில் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

'சிங்கள அமுல்' சம்பந்தமாக திரு. தர்மரத்தினம் தமது அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்பேசும் மக்கள்மீது சிங்களம்மட்டும் சட்டத்தைஅமுல் நடத்துவதை நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணத் தவறிய அரசாங்கம் தேசிய ஐக்கியத்தின் சீர்குலைவிலும் வாக்குத்தேடும் ஒருநடவடிக்கையாக சிங்களம்மட்டும் சட்டத்தை அமுல் நடத்துவதைப் பொருத்தமாகக் கருதுகிறது.

தமிழ்பேசும் மக்கள்மீது சிங்களம்மட்டும் சட்டத்தைத் திணிப்பது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைப்பதற்கு வழிவகுக்கும் என்று நாம் அடிக்கடி அரசாங்கத்தை எச்சரித்து வந்துள்ளோம்.

இன்று தொடக்கம் அமுலாக்கப்படவிருக்கும் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கை, மொழிக்கொள்கை சம்பந்தமாக காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் இப்போதைய பிரதமரும் கொடுத்த வாக்குறுதிகளுக்கும்வெளியிட்ட பிரகடனங்களுக்கும்முற்றிலும் மாருனவையாகும்.

---

## இன்று

வில்லூன்றி என வழங்கும் பூர்வதலுக்கோடி வீரகத்தி விநாயகராலய ஆருவது இலட்சார்ச்சனை பூர்த்திவிழா இன்று மாலை நடைபெறவிருக்கிறது

இன்று பகல் 10 மணியளவில் அபிஷேகமும். மாலை 6 மணிக்கு இலட்சார்ச்சனை பூர்த்திவிழாவும் நடைபெறும்.

---

## ஜோன்ஸன் உறுதி

வாஷிங்டன், ஜன. 2

தென் வியட்னமுக்கான அமெரிக்க இராணுவ உதவி தொடர்ந்தளிக்கப்படுமென்றும், தென் வியட்னும் ஒருபொழுதும் நடுநிலைமை நாடாகாது என்றும் அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் அறிவித்துள்ளார்.

ஸைகோனில் இராணுவச்சபைத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திபொன்றில் தென்வியட்னும் நடுநிலைமை நாடாகாது என்றும் தம்மை எதிர்க்கும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை விரட்டியே தீருவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) ஸெரஸி (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (காவலப்பிட்டியா) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) ஜெமினி (குருகலை)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!
உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்
மற்றும் பலர் திறம்பட நடித்த
சரவணு பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
தயாரிப்பு ஜி. என். வேலுமணி
டைரக்ஷன் கே. சங்கர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
வீரப்பா — ராஜசுலோசனு நடித்த
கைதி கண்ணுயிரம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## அலுவலகங்களு...

(1-பக்கத் தொடர்ச்சி)

கணக்கான பொது மக்களுக்கும் முக்கியமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களின் முதலாளிமார், சிப்பந்திகள், வாடகைக் கார்சாரதிகள், மோட்டார் வான்சாரதிகள் சொந்தக்காரர்களுக்கும் மற்றும் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டு வெற்றிகரமாக இதைச் செய்து முடிக்க உதவியவர்களுக்கும் தமிழ் பேசும் பொது மக்கள் சார்பிலும், தமிழரசுக் கட்சியின் சார்பிலும் எனது மனமுவந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இது ஒருவருக்கொருவர் நன்றி சொல்லும் விஷயமல்ல. மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றமகிழ்ச்சியினலேயே நாம் இதைச் சொல்லுகிறோம்.

### கந்தோர்களில் கவனிப்பு

என்றாலும் நாம் எந்நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும். இன்று தந்தை செல்வநாயகமும் திரு. அமிர்தலிங்கமும் நானும் அரசாங்க அலுவலகங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து பார்க்கவிருக்கின்றோம்.

சிற்சில காரியாலயங்களில் குறிப்பாகக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன விற்பனை நிலையங்களில் கடதாசி உறைகளும் பற்றுச் சீட்டுக்களும் முழுகக முழுக்க சிங்களததில் தான் கொடுக்கப் படுகிறதென எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

### நடவடிக்கை எடுக்க வேண்டும்

இவற்றை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கருதுகிறோம். எதற்கும் மக்களின் பூரண ஒத்துழைப்பும் விழிப்புணர்ச்சியும் இருக்குமாயின் இந்த தாபனங்கள் கூட தமிழ் பேசும் மக்களின் இயக்கத்தை இகழ்ச்சி செய்ய முடியாது.

## அரசாங்கம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் இரண்டு சிங்கள ஊழியர்கள் சித்திரை மாதம் 1-ம் தேதி வருவார்கள் என அறியப்படுகிறது. கச்சேரியில் எந்த வேலையும் சிங்களத்தில் நடைபெறவில்லை. வழக்கம் போலவே வேலைகள் நடைபெற்று வருகிறது. காசோலைகள், லைசென்ஸ், பெர்மிட் எதிலும் மாற்றமில்லை. பொதுமக்களில் யார் வந்தாலும் முதலில் ஒரு உயர்தர உத்தியோகஸ்தர் தொடர்பு கொள்ளுகிறர். இதன் பின்தான் அவருடைய காரியம் கவனிக்கப்படுகிறது.

### உள்ளூர் ஆட்சி கந்தோரில்

உள்ளூராட்சி கந்தோரில் ஒரு சிங்கள லிகிதர் மாத்திரம்1-ம்தேதிக்கு முன்னரே உள்ளூர் ஆட்சி மன்றங்களுடன் சிங்களத்தில்தான் தொடர்பு கொள்ளுகிறர். ஆனல் சிங்கள நிருபங்கள் கடிதங்கள் திரும்பி வந்தபின்பு ஆங்கில மொழி பெயர்ப்புடன் அனுப்பப்படுகிறது. மற்ற லிகிதர்கள் எல்லோரும் ஆங்கிலத்தில்தான் தொடர்பு கொள்ளுகிறர்கள். வேறு மாற்றங்கள் எதுவுமில்லை உள்ளூர் ஆட்சி மன்றங்கள் சிங்களத்தில் வரும் கடிதங்களை தொடர்ந்து திருப்பியனுப்பிக கொண்டிருந்தால் இப்பொழுது நடைபெறுவது போல் ஆங்கில மொழிபெயர்ப்பு அனுப்பப்படும்.

### காணிப்பதிவு கந்தோரில்

காணிப்பதிவு கந்தோரில் வழக்கம் போல பொது ஜனத்துடன் தொடர்பு நடைபெறுகிறது. பெயர் மாற்ற விண்ணப்பம், மையபிறப்புபதிதல்பதிவுகாரர்களுடன் தொடர்புகள் தமிழிலேயே நடைபெறுகிறது.

### நீதிமன்றம்

நீதிமன்றத்தில் வழக்குகள் வழமை போல் ஆங்கிலத்தில் பதிவு செய்யப்படுகின்றன. பற்றுச் சீட்டுக்கள் தொடர்ந்து ஆங்கிலத்தில் கொடுக்கிறர்கள். வேறு மாற்றங்கள் எதுவும் இல்லை. டிஸ்திறிக் கோர்ட்டிற்கு இரண்டு சிங்கள லிகிதர்களும, மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு இரண்டு சிங்கள லிகிதர்களும் வந்திருக்கிறர்கள்.

தபால் கந்தோரிலும், வன பரிபாலன இலாகாவிலும் மாற்றம் எதுவும் இல்லை.வழக்கம் போல நடைபெற்று வருகிறது.

# சகலமும் சிங்களத்தில்; திறைசேரி தீர்மானம்?

கொழும்பு, வியாழன்

இலாகாக்களும், அமைச்சுகளும் ஒன்றோடொன்று சிங்களத்திலேயே தொடர்பு கொள்ள வேண்டுமென்றும், சகல குறிப்புகளும், பைல்களும் சிங்களத்திலேயே எழுதபபடவேண்டும் எனவும் திறைசேரி தீர்மானித்துள்ளது.

நேற்றுத் தொடக்கம் நாட்டின் சகல பகுதிகளிலும் சிங்களம் நிர்வாக மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து இலாகா, அமைச்சு ஆகியவற்றின் நிர்வாக வேலைகளை எவ்விதம் நடத்துவதென்பது பற்றி ஆராய்வதற்காக திறைசேரிக் காரியதரிசி திரு சமரசகொடி தலைமையில் திறைசேரி காரியாலயத்தில் மகாநாடொன்று நடைபெற்றது.

சிங்களத்தில் தேர்ச்சி பெருமலிருந்தும், ஆங்கிலத்தில் வேலைசெய்வதற்கு சலுகை அளிக்கப்பட்ட ஊழியர்கள் மேலதிக வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுயபாஷை சுருக்கெழுத்தாளர்களை கூடுதலாக நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

வெளிநாட்டு சேவைக்கு இனிப் புதிதாக உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் பொழுது ஜி. ஸி. ஈ. தரத்தில் சிங்களத்தில் தேர்ச்சிபெற்றவர்களை மட்டுமே தெரிந்தெடுக்க வேண்டுமென பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு முடிவு செய்துள்ளது. நேற்றைய தினம் அமைச்சின் காரியாலயத்தில் கூடிய மகாநாட்டில் இம்முடிவு செய்யப்பட்டது. இம் மகாநாட்டுக்கு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸ் தலைமை வகித்தார்.

# ராஜினுமாவை வாபஸ்பெற முடியாதென அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

அரசகருமமொழி அமுல் சம்பந்தமாக ராஜினுமா செய்த அரசாங்க ஊழியர்கள் தங்களது ராஜினுமாக் கடிதங்களை வாபஸ்பெற முடியாது என்று திறைசேரி அறிவித்துள்ளது.

நூற்றுக்கணக்கான அரசாங்க ஊழியர்களுக்கு திறைசேரி அனுப்பிய தந்தியில் அரசகரும மொழி அமுல் சம்பந்தமாக ராஜினுமா செய்துள்ள அரசாங்க ஊழியர்கள் இனிமேல் அவர்களது கடிதங்களை வாபஸ்பெறமுடியாதென்றும் இன்றிலிருந்து அவர்கள் காரியாலயத்தை விட்டு வெளியேறவேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

சிங்களத்தில் தேர்ச்சிபெறும் காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளதால் ஏராளமான அரசாங்க ஊழியர்கள் தங்களது ராஜினுமாக் கடிதங்களை வாபஸ் பெறக்கோரியிருந்தனர்.

---

## படகு விபத்தில் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படகு ஏரியின் நடுவில் சென்றுகொண்டிருக்கையில் படகில் வந்த பெண்கள் ஆடிப்பாடியதாகவும், ஒரு சமயம் படகு சாய்ந்து திரும்பும் பொழுது என்ன நடக்கிறதென்பதைப் பார்ப்பதற்காகப் பெண்கள் சாய்ந்த பக்கத்துக்குத் தாவிப் பாய்ந்ததாகவும் இதனல் படகு கவிழ்ந்ததாகவும் படகோட்டி தெரிவித்தார். தான் நீந்திச் சென்று பின்னுக்கு வந்துகொண்டிருந்த படகில் ஏறியதாகவும் அவர் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளாகிய படகில் பிரயாணம் செய்து உயிர் தப்பியவர்களில் ஒருவரான செல்வி சுலங்கணி சமரக்கோன் படகு திடீரெனக் கவிழ்ந்ததாகத் தெரிவித்தார். இவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறர்.

---

பீக்கிங், ஜன 2

சோவியத் யூனியனுக்கு சீன அனுப்பிய புதுவருட வாழ்த்துச்செய்தியில் சீன—ரஷ்ய உறவு முறிந்துவிடாது என்று குறிப்பிட்டுள்ளது ரஷ்யாவும் ஒரு புதுவருடச் செய்தியை சீனவுக்கு அனுப்பியுள்ளது.

## கிரிக்கெட் டெஸ்ட்

பிரிஸ்பேன், ஜன. 2

இங்கு ஆஸ்திரேலியாவுக்கும் தென்னபிரிக்காவுக்குமிடையே நடைபெற்றுவரும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 308 ரன்கள் எடுத்தது தென்னபிரிக்கா முதல்இன்னிங்ஸில் 274 ரன்களுக்கு அவுட் ஆனது.

---

## சிங்களம் படிப்பவர் மீது நடவடிக்கை

### தமிழரசு வாலிப முன்னணி ஆராயும்

யாழ்ப்பாணம், வெள்ளி

'தனிச்சிங்கள' எதிர்ப்புப் போராட்டத்தைச் சிலர் சிங்களம் படித்து பலவீனப்படுத்துவதற்கு எதிராக எப்படியான தீவிர நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி ஆராயும் பொருட்டு தமிழரசுக கட்சி வாலிப முன்னணியினர் நாளை பிற்பகல் கட்சிக் காரியாலயத்தில் கூடுவரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## தி. மு. கழகத்தினர் ஐவர் கைது

சென்னை, ஜன 2

மதுரையில் டெலிபோன் எக்சேஞ்ச் காரியாலயத்துக்கு முன்னதாக மறியல் செய்த ஐந்து திராவிடக்கழகத்தினர் இன்றுகைதுசெய்யபபட்டனர்.


**ST John's College Jaffna Welfare Association Chundikuli**

The Jaffna Academy, Chundikuli Reopens on 0th. January 1964 Admissions from 6th January to 9th. January.

2nd Jan. 1964


## மரண அறிவித்தல்

சுன்னுகம் 'பிறின்ஸ்' புகைப்பட ஸ்தாபன உரிமையாளர் நடராசாவின் பாட்டியும், உடுவில் சாந்தலிங்க பத்தரின் சிறியதாயாரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி (கண்ணரின்) மனைவியுமான தங்கம் தமது 108-வது வயதில் நேற்று காலமானர். அன்னரின் பூதவுடல் இன்று தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒருமணிக்கு தட்டா தெரு மதவடி ஒழுங்கை 555/2 இலக்கத்திலிருந்து சோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

— நடராசா